# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே




சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 28.03.2023 | supeedsam.com | supeedsam@gmail.com


# ஏறாவூர் புன்னைக்குடா வீதியை சிங்களப் பெயராக மாற்ற ஆளுநர் உத்தரவு

## உடன் நிறுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவிப்பு



(ரக்ஸனா)

தொன்று தொட்டு ஏறாவூர் புன்னைக்குடா வீதி என புழக்கத்திலிருந்து வரும் புன்னைக்குடா வீதியின் பெயரை எல்விஸ் வல்கம வீதி என சிங்களப் பெயராக மாற்றுவதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உத்தரவிட்டுள்ளது பிரதேசத்தில் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

ஆளுநரின் உத்தரவு வெளியானதை அடுத்து ஏற்கெனவே ஏறாவூர் நகரை ஊடறுத்துச் செல்லும் கொழும்பு – மட்டக்களப்பு நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் அறிவித்தலாக அமைக்கப்பட்டிருந்த புன்னைக்குடா வீதி என்ற பெயர்ப் பலகை அகற்றப்பட்டிருக்கிறது.

இந்த அறிவித்தல் வெளியாகி ஏறாவூரில் பதற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு மாகாண

02 ஆம் பக்கத்தில்...





சுவாமி விபுலானந்த அடிகளாரின் 131 வது ஜனன தின விழா காரைதீவில் நடைபெற்ற போது முதன்மை அதிதியாக இலங்கை கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் கலந்து சிறப்பித்திருந்ததைக் காணலாம். படம்: ( காரைதீவு சகா)

## விக்கிரகங்கள் அழிப்பு மனித உரிமை ஆணைக்குழுவில் நிர்வாகத்தினர் முறைப்பாடு!



வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த விக்கிரகங்கள் உடைத்தழிக்கப்பட்டமைக்கு எதிராக ஆலய நிர்வாகத்தினரால் வவுனியா பிராந்திய மனிதஉரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# வெடுக்குநாறிமலை ஆலயம் முற்றாக அழிப்பு; கண்டுகோள்ளாத தமிழ் எம்.பி.க்கள்!

## யாழில் பாரிய போராட்டத்திற்கு அழைப்பு

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயம் நேற்றையதினம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது வரை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என என சைவ மகா சபை பொதுச் செயலாளர் வைத்தியர் பரா.நந்தகுமார் தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

02 ஆம் பக்கத்தில்...

## டிசம்பருக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும்

டிசம்பருக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய மஹிந்த ராஜபக்ஷ டிசம்பரில் அல்லது அதற்கு முன்னதாக

02 ஆம் பக்கத்தில்...

## புத்தர் குடியேறி இடம்பிடிக்கின்ற செயற்பாடு கோத்தா காலத்து கர்ம வினை ரணில் காலத்திலும் வெளிப்படும்



கச்சதீவு உள்ளிட்ட இடங்களில் புத்தர் குடியேறி இடம்பிடிக்கின்ற செயற்பாட்டில் ஈடுபடும் நிலையில், கோட்டபாயவின் காலத்து கர்ம வினைகள் வெளிப்பட்டது போன்று ரணில் காலத்திலும் வெளிப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் அவர் ஏற்பாடு

02 ஆம் பக்கத்தில்...

## கச்சத்தீவில் சின்ன புத்தர்: கடற்படை விளக்கம்

கச்சத்தீவு புத்தர் சிலை விவகாரம் குறித்து இலங்கை கடற்படையினர் நேற்று (27) விளக்கமளித்துள்ளனர்.

இது குறித்துக் கடற்படையினர் தெரிவித்ததாவது

02 ஆம் பக்கத்தில்...

## உள்ளூராட்சி தேர்தல் மீண்டும் ஒத்தி வைக்கப்படுமா?

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இரண்டாவது தடவையாகவும் ஒத்திவைக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி தேர்தலுக்காக முதலில் மார்ச் 9ஆம் திகதி அறிவிக்கப்பட்டு பின்னர் ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது.

02 ஆம் பக்கத்தில்...

## நாட்டின் அனைத்து பிரச்சினைகளுக்கும் போராட்டமே காரணம்



நாட்டில் நிலவும் அனைத்து பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கும் போராட்டமே காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH



Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma 34598
25605: cicero

# சுவாமி விபுலானந்த அடிகளாரின் 131 வது ஜனன தின விழா!






(காரைதீவு சகா)

சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியமும் இணைந்து நடாத்திய சுவாமி விபுலாநந்தரின் 131வது ஜனனதின விழா நேற்று (27) திங்கட்கிழமை அவர் பிறந்த காரைதீவு மண்ணில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

முதன்மை அதிதியாக இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் கலந்து சிறப்பித்தார். நினைவுப்பேருரையை தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்மொழித்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி கி.இரகுவரன் நிகழ்த்தினார்.

காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் பணிமன்றத்தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு திருமுன்னிலை அதிதியாக மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் கலந்து ஆசி வழங்கினார்.

கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், கிழக்கு பல்கலைக்கழக கட்புல தொழில் நுட்ப கலைத்துறைத் தலைவர் கலாநிதி சு.சிவரெத்தினம், சுவாமி விபுலாநந்த 'நூற்றாண்டு விழாச் சபைத் தலைவர் க.பாஸ்கரன் ஆகியோரும் மற்றும் சிறப்பு விசேட அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

பணி மன்றத்தின் முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

காரைதீவு கோட்ட மாணவரிடையே நடாத்திய பேச்சு கட்டுரை பாஓதல் சித்திரம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

## நாட்டின் அனைத்து பிரச்சினைகளுக்கும் போராட்டமே காரணம்

பேருவளையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

போராட்டப் பகுதியில் வழங்கப்பட்ட போதைப் பொருள் பாவனையால் சிறுவர்கள் தற்போது அதற்கு பழகிவிட்டதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

## உள்ளூராட்சி தேர்தல் மீண்டும் ஒத்தி வைக்கப்படுமா?

எவ்வாறாயினும், ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு இன்னும் ஒரு மாதமே உள்ளதால் இம்முறை வாக்குப்பதிவு திகதியும் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பணம் வழங்கப்படாததன் காரணமாக, வாக்குச் சீட்டு இதுவரை அச்சடிக்கப்படாததால் இவ்வாறு தேர்தல் தாமதமாகலாம் என கூறப்படுகிறது.

எனினும், தேர்தல் ஒத்திவைப்பு குறித்து ஆணைக்குழு இது வரை அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடவில்லை.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு இதற்கு முன்னர் அறிவித்திருந்தது.

## கச்சத்தீவில் சின்ன புத்தர்: கடற்படை விளக்கம்

கச்சத்தீவானது சுமார் 50 கடல் மைல் தொலைவில் உள்ள மக்கள் வசிக்காத தீவொன்றாகும். இத்தீவின் பாதுகாப்புக் கருதி கடற்படைக் குழுவொன்று அங்கு கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றது.

இக்கடற்படைக் குழுவினர் பாதுகாப்பு கடமைகளுக்கு மேலதிகமாக, இலங்கை கடற்படை பௌத்த சங்கத்தின் பூரண பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தயும் பாதுகாத்து வருகின்றனர்.

இத்தேவாலயமானது வருடாந்தப் பெருவிழாவின் போது மாத்திரமல்லாது தினமும் சுத்தம் செய்யப்பட்டு, விளக்குகள் ஏற்றப்பட்டு, மிகுந்த பக்தியுடன் கடற்படையினர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இப்பகுதியில் பணிபுரியும் கடற்படையினர்களில் பெரும்பான்மையானவர்கள் பௌத்தர்கள் என்பதால், அவர்களின் வழிபாட்டு நடவடிக்கைகளுக்காகவே ஒரு சிறிய புத்தர் சிலையொன்று கடற்படையினரின் இல்லத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த தேவாலயத்தைத் தவிர, இந்த தீவில் வேறு எந்த நிரந்தர கட்டுமானமும் செய்ய முடியாது என்பதால் கடற்படையினர் தற்காலிகமாக கட்டப்பட்ட இராணுவ இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும், புனித அந்தோனியார் தேவாலயத்தைத் தவிர, இத் தீவில் வேறு எந்த மத வழிபாட்டுத்தலமும் இல்லை, எதிர்காலத்தில் எந்த ஒரு விகாரையையும் கட்ட கடற்படை முயற்சி செய்யாது இவ்வாறு கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## விக்கிரகங்கள் அழிப்பு; மனித உரிமை ஆணைக்குழுவில் ...

முறைப்பாட்டை வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் செயலாளர் து. தமிழ்செல்வன் கருத்து தெரிவிக்கையில்,

எமது ஆலயத்தின் விக்கிரகங்கள் அழிக்கப்பட்டமை மூலம் பௌத்த ஆக்கிரமிப்பின் வெளிப்பாட்டை அனைவரும் உணர்ந்துகொள்ள முடியும். இந்த துன்பியல் சம்பவம் எமக்கு மிகுந்த வேதனை அளிப்பதுடன் இவ்வாறான செயலை செய்தவர்களுக்கு எமது வன்மையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆலயத்திற்குள் செல்வதற்கு தொல்லியல் திணைக்களத்தால் எமக்கு தடைவிதிக்கப்பட்டிருந்த நிலையில் அந்த திணைக்களத்தின் வாகனங்களே அங்கு தொடர்ச்சியாக சென்று வந்தது. எனவே இந்தச்சம்பவத்தின் பின்னணி தொடர்பாக தொல்லியல் திணைக்களத்தின் மீதே நாம் சந்தேகம் கொள்கின்றோம். மனித உரிமை ஆணைக்குழுவிலும் அவர்களுக்கு எதிராகவே எமது முறைப்பாட்டை பதிவுசெய்திருக்கின்றோம். என்றனர்.

இதேவேளை விக்கிரகங்கள் அழிக்கப்பட்ட விடயம் தொடர்பாக இன்றையதினம் காலை நெடுங்கேணி பொலிஸ்நிலையத்திலும் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புத்தர் குடியேறி இடம்பிடிக்கின்ற செயற்பாடு

செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

தமிழ் மக்களுடைய வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மிக முக்கியமான வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெடுக்கு நாறி எனும் பகுதியிலே நீண்ட நெடுங்காலமாக வரலாற்று பீதியிலே சைவத்தமிழ் பாரம்பரியத்தோடு ஆதி சிவனை வழிபட்டு வந்த மூதாதையரும் அந்த பரம்பரையும் அந்த மண்ணில் இருக்கின்றார்கள்.

வெடுக்குநாறி சிவனாலயமும், அந்த சிவனாலயத்தின் பரிபாலய தெய்வங்களான அம்மன், பிள்ளையார், வைரவர் போன்ற கடவுள்களுடைய சிலைகளும் அடித்து உடைத்து சிதைக்கப்பட்ட விடயத்தை நாங்கள் நேற்று பார்க்க கிடைத்தது.

மிக முக்கியமாக வெடுக்குநாறி மலை என்பது தொல்பொருளிற்குரியதென்றும், அங்கு யாரும் பிரவேசிக்க வேண்டாம் என நீதிமன்றம் கட்டளையிட்டதற்கு அமைவாக அந்த ஆலயத்தை பூசித்தும், பராமரித்தும் வந்த பூபால ஐயாவும், ஏனைய பூசகர்களும் அந்த இடத்திற்கு செல்ல முடியாமல் அவர்கள் வேதனைப் பட்டுக்கொண்டு நீதிமன்ற கட்டளையை மதித்து நடந்தார்கள்.

அவர்கள் மீதுதான் பிக்குமாரும், தொல்பொருள் திணைக்களமும் அவ்விடத்தை சேதப்படுத்தியதாக வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். அதையெல்லாம் தாண்டி நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக நீதிமன்ற கட்டளைக்கு மதிப்பளித்து அவர்கள் அந்த இடத்திற்கு செல்லாது இருந்தபொழுது, அந்த இடத்திற்குள் நுழைந்த பாதுகாப்பு தரப்பினர் அவ்விடத்திலிருந்த ஆதிசினனுடைய சிவலிங்கத்தையும், அம்மன், பிள்ளையார், வைரவர், முருகன் சிலைகளையும் சிதைத்து தூக்கி எறிந்திருக்கிறார்கள்.

இது இந்த நாட்டில் மிகவும் கேவலமான செயல். தாங்கள் செய்த கர்மம் என்பது கோட்டபாயவின் காலத்தில் அவருக்கு வெளிப்பட்டிருந்தது. அதனைத்தாண்டி மீண்டும் ரணில் விக்ரமசிங்கவில் காலத்திலும் கரும வினைகளை அவர்கள் சந்திக்கப்போகின்றார்கள்.

இது தெய்வ அனு˙கிரகத்திற்குட்பட்ட விடயம். ஏற்கனவே குருந்தூர் மலையில் ஒரு விகாரையை கட்டக்கூடாது என முலை˙லைத்தீவு நீதிமன்றம் உத்தறவு பிறப்பித்திருக்கின்றது. இலங்கையில் நீதிமன்றத்தின் நியாய ஆதிக்கங்கள் மீறப்பட்டு அந்த நீதிமன்றத்தின் நட்ட நடைமுறைகள் மீறப்பட்டு நீதிமன்றம் அவமதிக்கப்பட்டு அங்கு புத்த விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விகாரையிலே வைக்கப்பட்டுள்ள தூபி ஒரு சிவலிங்கமாகும். அவ்வாறு குருந்தூர் மலையில் கட்டவேண்டாம் என்ற விடயத்திற்கு மாறாக கட்டியிருக்கின்றார்கள். வெடுக்குநாறி மலையில் இருந்த சிவனாலயம் இருக்கட்டும் எனவும், அரு தரப்பினரும் அங்கு செல்ல வேண்டாம் எனவும் கட்டளையிடப்பட்டிருந்த நிலையில், இன்று அங்கிருந்த விக்கிரங்கள் உடைத்தெறியப்பட்டிருக்கிறதென்றால், மிக மோசமான காரியம். இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

இலங்கையினுடைய ஆட்சியாளர்கள் எங்கெங்கு பௌத்தங்களை வைக்க முடியுமோ வைத்து, அந்த இடங்களை ஆக்கிரமிக்க மிகக் கடுமையாக ஈடுபடுகின்றார்கள் என்பதை மிகத் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்றது.

மிக முக்கியமாக அண்மையிலே, கச்சதீவில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது. நெடுந்தீவு பங்குத்தந்தையாக இருக்கின்ற தந்தை வசந்தன் அவர்கள் நேரடியாக கச்சதீவில் புத்தர் சிலை எழுப்பப்பட்டிருப்பதை நேரடியாக கண்டிருக்கி˙றார்.

இம்முறை 40 பிக்குமார்கள் கச்சதீவுக்கு சென்றிருக்கின்றார்கள். கச்சதீவு என்பது வடக்கு மகாணத்தில் யாழ்ப்பாணத்தோடு சேர்ந்த ஒரு தொகுதி. அங்கு இந்தியாவின் தமிழ்நாட்டை சேர்ந்த மக்களும் வருவார்கள். இலங்கையில் இருக்கின்ற மக்களும் செல்வார்கள்.

அப்படியான இடங்களிலும் புத்தர் குடியேறி இடம்பிடிக்கின்ற செயற்பாட்டில் ஈடுபடுகின்றார். குருந்தூர் மலையில் புத்தர் சிலை இருப்பதாக குறிப்பிட்டு இன்று 400 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை பறிப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இன்று காட்டுக்குள் இருக்கின்ற, கால காலமாக பொங்கல் செய்து வழிபட்டுக்கொண்டிருக்கின்ற ஆதிசிவன் ஆலயத்தை வெடுக்குநாறி மலையிலிருந்து தக்கி எறிந்துவிட்டு, அந்த இடத்தில் புத்தர் சிலையை வைத்து அந்த பிரதேசங்களை தங்களுடைய பிரதேசங்களாக மாற்ற முயற்சிக்கின்றார்கள்.

இந்த நாட்டில் ஜனாதிபதி, அதற்கு பொறுப்பாக இருக்கின்ற அமைச்சர் உட்பட இனவாதத்தின் உச்சத்தில் இருக்கிறார்கள் என்பதைத்தான் இந்த செயற்பாடுகள் வெளிக்காட்டுகின்றன.

இலங்கையிலே நீதிமன்றங்களால் எதுவும் செய்ய முடியாது. நீதிமன்றங்கள் அப்பாவிகளையும் அல்லது நீதிமன்றங்களுக்கு எதிராக பேசுபவர்களையும்தான் அடைக்க முடியும் என்ற சட்டம்தான் இன்று இலங்கையிலே செல்லுபடியாகின்றதே தவிர, நீதிமன்றத்தின் ஊடாக இன்று தடுக்கப்பட்ட சட்டங்கள் அல்லது மீறி செயற்படுபவர்களை கைது செய்யவோ அல்லது தடுக்கவோ முடியாமல் இருக்கின்றமை மிக மிக துர்ப்பாக்கியமானது.

அது இலங்கையில் இருக்கின்ற சட்டத்தை கேள்விக்குட்படுத்தியிருக்கின்றது. ஆகவே நாங்கள் தொடர்ந்தும் இந்த விடயத்திற்காக குரல் கொடுப்போம். தொடர்ந்தும் ஆதிசிவன் ஆலயம் வெடுக்குநாறி மலையில் இருப்பதற்கான முழுவகையான முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கின்றோம்.

இவ்விடயம் தொடர்பில் வரும் வியாளனன்று மிகப்பெரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டும், இவ்விடயம் தொடர்பில் அவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளையும் செய்து போராட்டங்களையும் முன்னெடுத்து இந்த உருவச்சிலைகளை இருந்த இடங்களில் மீள வைக்கும்வரை தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஒற்றுமையாக இந்த பணியை செய்ய வேண்டும்.

இதிலே, அரசியல், கருத்து வேறுபாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு நாங்கள் சைவத்தமிழர்கள், இந்துத்தமிழர்கள் எல்லோரும் இணைந்து பிடுங்கப்பட்ட சிலைகளை அங்கு கொண்டு சென்று அதனை பிரதிஸ்டை செய்து தொடர்ந்தும் அந்த இடத்தில் வழிபாடுகள் இடம்பெறும் வகையில் எங்களுடைய செயற்பாடுகள் அமைய வேண்டும் என நான் வேண்டி நிற்கின்றேன் என தெரிவித்தார்.

## டிசம்பருக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும்

தேர்தல் நடக்கும் என நம்புவதாக தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் அல்லது ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும், தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீண்டும் ஒன்றிணைந்து தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## வெடுக்குநாறிமலை ஆலயம் முற்றாக அழிப்பு;

இந்த நாட்டிலே மிக நீண்ட காலமாக தமிழர்களின் இனப்பிரச்சினை புரையோடிப்போயுள்ளது. குறிப்பாக தமிழர்களின் தொன்மங்களாக இருக்கும் சிவ வழிபாட்டு தளங்கள் போருக்கு பின்னர் அழித்து வரும் நிலையில் மிக அண்மையில் மிக உக்கிரமாக அழிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையி˙ல் ஆதிசிவன் ஆலயத்தில் அனைத்து சிலைகளும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

2017 க்கு பின்னர் இவ் ஆலய வழிபாட்டிற்கு பல தடைகள் மற்றும் பரிபாலன சபையினர் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் காணப்படுகின்றது. இதைவிட நீதிமன்ற உத்தரவையும் மதிக்காது பொலிசார் நடந்து வருகின்றனர்.

இதற்கு நீதியான விசாரணையை கோருகின்றோம். மிக சில நாட்களுக்கு முன் குருந்தூரில் பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளது. அங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட எட்டுப்பட்டை சிவலிங்கம் ஆய்வுக்குட்படுத்தாது விகாரையின் உச்சியில் நிறுவியுள்ளனர்,

தொல்பொருள் திணைக்களம் அரச இயந்திரங்களின் ஆதரவோடு நீதிமன்ற உத்தரவை மீறி தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதுவரை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. வெவ்வேறு நடவடிக்கைகளுக்காக கருத்து வெளியிடும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்னியில் ஏராளமான சைவசமயத்தவர்கள் இருக்கையில் எந்தவொரு உறுப்பினர்களும் கருத்துக்களை வெளியிடவில்லை.

இந்த சம்பவம் நடந்து ஒரு நாள் கடந்துள்ள நிலையில் ஒரேயொரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே நேரில் சம்பவ இடத்திற்குச் சென்றிருக்கின்றார். இதுவரை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கண்டனங்கள் எதிர்ப்புக்கள் எதையும் காணவில்லை. எனவே இவ்விடத்தில் காட்டமான கருத்தை பதிவு செய்கின்றேன். கன்னியா வெந்நீருற்றும் அநுராதபுர காலத்திற்குரியதென அச்சிடப்பட்டு தொல்லியற் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் மீட்கப்பட வேண்டும்.

யுனெஸ்கோ என்ற மரபுரிமை மையம் காணப்படுகையில் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கை செங்கல் கூட வாங்க முடியாமல் கடனில் சிக்கி சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கையில் இவ்வாறான சம்பவங்களை மேற்காண்டு வருகின்றனர். இது தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச நாணய நிதியத்திற்கு இந் நிலைகள் தொடர்பான விடயங்களை முன் வைக்க வேண்டும்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னரே எமது பழமைச் சின்னங்கள் அழிக்கப்படுகின்றன. பொலன்னறுவை உட்பட பல்வேறு பிரதேசங்களில் சிவன் கோயில்கள் காணப்படுகின்றன.

கன்னியா, வெடுக்குநாறி, கீரிமலை போன்ற கோயில்களே தமிழ்ப் பெயரிலே காணப்படுகின்றன.

முல்லைத்தீவிலும் வன்னியிலும் மன்னாரிலும் சைவத்தமிழர்கள் பல்வேறு விதமாக தொடர்ந்தும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

திருநீறு பூசுவதையும் நடராஜர் சிலை வைப்பதையும் பற்றி பேசும் நாக்கள் இந்த விடயங்களில் கரிசனை கொள்வதில்லை. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக குரல் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த நிலையிலே நாம் போராட்டத்தை மேற்கொள்ளத் தள்ளப்பட்டுள்ளோம். இவ்வாறான ஆக்கிரமிப்புக்களை நிறுத்த அழுத்தம் பிரயோகிக்க வேண்டுமென சர்வதேசத்திற்கு ஒரு செய்தியினை சொல்கின்றோம்.

எனவே நாளைய தினம் 4 மணிக்கு நல்லூர் ஆலயச் சூழலில் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளோம். இதற்கு அனைத்து தரப்பினரும் பூரண ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். – என்றார்

## ஏறாவூர் புன்னைக்குடா வீதியை சிங்களப் பெயராக மாற்ற ஆளுநர் உத்தரவு

முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய சுற்றாடல்துறை அமைச்சருமான நஸீர் அஹமட் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

அதில்;, பாரம்பரியமாக புன்னைக்குடா வீதி என இருந்து வரும் பெயர் மாற்றம்பெறாது. பெயர் மாற்ற செயற்பாடுகளை உடன் நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திடீர் பெயர்மாற்ற செயற்பாடானது கண்டிக்கத்தக்கதோடு ஆளுநரின் அதிகார எல்லையை மீறும் செயற்பாடாகும். இவ்வாறான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதை ஆளுநர் உடனடியாக நிறுத்த வேண்டும். என்று தெரிவித்திருந்தார்.

கொழும்பு – மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் ஏறாவூர் நகரிலிருந்து சுமார் 5.23 கிலோமீற்றர் தூரத்தில் புன்னைக்குடாக் கடல் அமைந்திருக்கிறது. இது வங்காளக் கடல் பகுதியாகும். ஆங்கிலேயர் காலத்திற்கு முன்பிருந்தே பூர்வீகமாக இந்த வீதி புன்னைக்குடா வீதி என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. புன்னை மரங்கள் அங்கு அதிகமிருந்ததால் இது காரணப் பெயராகியுள்ளது.

ஏறாவூர் நகர பிரதேசம் நூறு சத வீதம் முஸ்லிம் சமூகத்தைக் கொண்டமைந்திருந்தபோதும் கூட அந்த வீதிக்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த எவரினதும் பெயரைச் சூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், திடீரென தென்பகுதி காலிப் பிரதேச சிங்கள சமூகத்தைச் சேர்ந்த 9 பேர் ஆளுநருக்கு ஒரு கடிதத்தை எழுதியுள்ளனர். அதில் ஏறாவூர் புன்னைக்குடா வீதிக்கு எல்விஸ் வல்கம என பெயரை மாற்றுமாறு கோரியுள்ளனர். அந்த வேண்டுகோளை உடனடியாக அமுல்படுத்தும் நடவடிக்கையில் ஆளுநர் இறங்கி உத்தரவையும் பிறப்பித்துள்ளார்.

காலியைச் சேர்ந்த சிங்கள சமூகத்தவர் அந்த 9 பேரும் விடுத்துள்ள வேண்டுகோளில் காலி தல்பே கிராமத்தில் பிறந்து தனது 12வது வயதில் ஏறாவூருக்குப் போய்ச் சேர்ந்து அங்கே வர்த்தகம் செய்து நிலபுலன்களையும் வாங்கியதுடன் இன்னும் பல சேவைகளைச் செய்த எல்விஸ் வல்கம அவர் காலியின் பெருமைக்குரிய புதல்வனாகும். எனவே அவரது பெயரை ஏறாவூர் புன்னைக்குடா வீதிக்குச் சூட்ட உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரைக் கேட்டுக் கொள்கிறோம் என்று எழுதப்பட்டுள்ளது. ஆளுநர் ஏற்கெனவே ஏறாவூர் பொதுச் சந்தையை ஏறாவூர் சிங்களச் சந்தை எனக் குறிப்பிட்டு ஏறாவூர் நகர சபைக்கு கடிதம் அனுப்பியிருந்ததும் அது ஆளுநரது உத்தியோக பூர்வ வலைத் தளத்தில் வெளியாகி பெருத்த சர்ச்சையை ஏற்படுத்தியவுடன் ஆளுநர் அந்த வார்த்தைப் பிரயோகத்தை மாற்றிக் கொண்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

மேலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத மாகாண சபை நிருவாகக் காலத்திலும் உள்ளூராட்சி மன்ற நிருவாகம் கலைக்கப்பட்டிருக்கும் தறுவாயிலும் சந்தர்ப்பத்தைப் பார்த்து கிழக்கு மாகாண ஆளுநரின் நடவடிக்கைகள் முற்று முழுவதுமாக சிங்கள பேரினவாத அமுல்படுத்தலை யைமப்படுத்தியதாக இடம்பெற்று வருவதாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் கிழக்கு மாகாண ஆளுநர்களாக படை அதிகாரிகள் மற்றும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தோரே நியமிக்கப்பட்டிருந்த போதும் தற்போதைய ஆளுநரைப் போன்று அவர்கள் நேரடியான சிங்கள மயமாக்கலை நோக்கி செயற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்பில் வன இலகா திணைக்களத்தினர் அச்சுறுத்துதல்
# இளம் தொழில் முயற்சியாளர்கள் கவலை




(க.ருத்திரன்)

'இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின்' கீழ் காணிகளை பகிர்ந்தளிக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு அமைய முள்ளிவட்டவான் வாகநேரி கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் பயணாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளில் இருந்து அவர்களை வெளியேறுமாறு வன இலகா திணைக்களத்தினர் அச்சுறுத்துவதாக பயணாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக இன்று காலை கிழக்கு ஊடக மன்றம் வாழைச்சேனையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின் போது பாதிக்கப்பட்ட பயணாளிகளின் சார்பில் கலந்து கொண்டவர்கள் இவ்வாறு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

2020 ஆண்டில் ஆட்சி புரிந்த ஜனாதிபதியின் திட்டத்தின்படி பயிர் செய்கைக்காக காணி கேட்டு விண்ணப்பித்திருந்தோம்.

அதன்படி 2022.06.16 ஆம் திகதி முள்ளிவட்டவான் கிராமத்தில் ட ஏக்கர் அளவில் 17 பயணாளிகளுக்கு கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் மற்றும் செயலக காணி அதிகாரிகளும் நேரடியாக வருகை தந்து காணியினை பகிர்ந்தளித்ததுடன் ஆவனமும் வழங்கியுள்ளனர்.

அதனை துப்பரவு செய்து பயிர் செய்கை நடவடிக்கையில் ஈடுபடும் போது வன இலகா அதிகாரிகள் குறித்த இடத்திற்கு வருகை தந்து தங்களது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் எந்தவொரு பயிர்செய்கை நடவடிக்கையும் மேற்கொள்ளவேண்டாம் என கூறுவதோடு சிலரை கைது செய்து சட்ட நடவடிக்கையும் எடுத்து வருகின்றனர். ஏனைய இடங்களில் அடையாளமிடபப்ட்டது போன்று எங்களுக்கு வழங்கப்பட்ட இடத்தில் எந்தவிதமான அளவைக் கல்லும் இடப்படவில்லை.ஏழை மக்களாகிய நாங்கள் கஸ்ரப்பட்டு உழைத்த பணத்தினை பயிர்செய்கை நடவடிக்கைக்கு செலவு செய்துள்ளோம்.தற்போது பலனின்றி போகும் நிலையில் உள்ளது.நாங்கள் எந்த அதிகாரியின் கதையினை கேட்பது என்று புரியாமல் உள்ளது.எனவே குறித்த விடயம் தொடர்பாக காணி வழங்கிய பிரதேச செயலக நிர்வாகத்திடம் நிலைமை தொடர்பாக தெரிவித்த போதும் அவர்கள் பாராமுகமாக இருப்பது கவலையளிப்பதாக தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த இரு தரப்பு அரச திணைக்கள நிர்வாகச் சிக்கலில் தாங்கள் அகப்பட்டு அவஸ்த்தைப்படுவதாகவும் மேற்குறித்த விடயம் தொடர்பான நிலைமைகளை கவனத்தில் கொண்டு மாவட்டத்தின் இராஜாங்க அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகள் கவனமெடுத்து தங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் சுயாதீனாமாக பயிர் செய்கை நடவடிக்கையில் ஈடுபட தீர்வு பெற்றுத் தருமாறு கேட்கின்றனர்.

# நான் ஒரு நெருப்பு, என்னை யாருமே சீண்ட நினைக்க கூடாது

## உதயகலா சீற்றம்



காணாமல் போனோர் விளம்பரத்தை வைத்து யாரும் அரசியல் வியாபாரம் செய்ய முயலாதீர்கள், நான் ஒரு நெருப்பு, என்னை யாருமே சீண்ட நினைக்க கூடாது என சர்வ மக்கள் கட்சியின் தலைவி ரீ.உதயகலா இன்று மட்டக்களப்பு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

காணாமல்போனோரை வைத்து சிலர் அரசியல் செய்கின்றனர், அரசினால் அவர்களுக்கு நஸ்ட ஈடு கொடுக்க அரசாங்கம் முற்பட்டால் அதை பெறுவதற்கு விடாமல் தடுக்கும் அதோ அரசியல்வாதிகள் கட்டும் கோமணம் கூட ஏதோ ஒரு வகையில் அது அரச சொத்தாகத் தான் இருக்கும்.

அரச பாதுகாப்புடன்தான் ஆர்ப்பாட்டங்களுக்கு இந்த அரசியல்வாதிகள் வருகின்றார்கள் இவர்களுக்கு வெட்கமில்லையா இவ்வாறு அரச நிதியை பயன்படுத்திக்கொண்டு மக்களை ஏமாற்றி புழைப்பு நடத்த, நான் மக்களுக்காக பாராளுமன்றம் சென்றால் நிச்சயமாக அந்த சம்பளத்தை நான் பெறமாட்டேன்.

இவர்கள் எத்தனை ஆர்பாட்டங்களை செய்தாலும் இவர்களால் இந்த நாட்டை சீரழிக்க எந்தவகையிலும் முடியாது. ஜனாதிபதி ரணில் நாட்டை நல்ல நிலைக்கு கொண்டுசெல்வார். அத்தோடு இந்த நாட்டு மக்கள் ரணில் விக்கிரம சிங்கவிற்கே வாக்களித்து மீண்டும் அவரையே ஜனாதிபதியாக தெரிவு செய்வார்கள் இதுவே உறுதி என்றார்.

# ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் அரச மானிய அரிசி விநியோகம்





(ந.குகதர்சன்)

அரசாங்கத்தினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரங்களை முன்னேற்றும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்முதல் செய்து அதனை பிரதேசத்தில் உள்ள குறைந்த வருமானங்களை பெறும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கும் திட்டத்திற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பதினான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பயணாளிகளுக்கு அரிசி வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வி.தவராஜாவின் வழிகாட்டலில் எட்டு கிராம சேவகர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 5802 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக பத்து கிலோ அரிசி வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று (ஞாயிற்றுக்கிழமை) பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள எட்டு கிராம சேவகர் பிரிவுகளிலும் இடம் பெற்றது.

இந் நிகழ்வுகளில் பிரதேச செயலாளர் வி.தவராஜா, உதவி பிரதேச செயலாளர் எஸ்.எம். அல்அமீன், பிரதி திட்ட பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், கணக்காளர் அஹமட் சஜ்ஜாத், சமுர்த்தி தலைமைய முகாமையாளர் எம்.ஐ.அஸீஸ், உதவி மாவட்ட பதிவாளர் எம்.ஐ.மாஜிதீன், நிருவாக உத்தியோகத்தர் எஸ்.ஏ.ஹமீட், சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஏ.சி.நஜிமுதீன் கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நீச்சல் வீரர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைப்பு





(ஹஸ்பர்)

UN SDG14 ''Life Below Water'' என்ற இலக்கின் அடிப்படையில் 19.03.2023 அன்று Trinco Aid இன் ஏற்பாட்டில் Yana Foundation (swimming Academy) இல் பயிற்சி மாணவர்களை கொண்டு திருகோணமலை நகர கடல் ஆழ்பகுதி, கரைப்பகுதிகள் சுத்தமாக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு Vanni Hope நிறுவனத்தின் நிதி உதவியில் நேற்று (26) திருகோணமலை மக்கேய்சர் உள்ளரங்க நீச்சல் தடாகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இன் நிகழ்விற்கு பிரதம விருந்தனராகக் திருமதி. மைதிலி சேகரன் (Deputy Director of Education Trincomalee) அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக திரு. முஹம்மட் பாரிஸ் ( Vanni Hope Director & Sri Lanka Office), திருமதி. தயாளினி ஹரிகரன் ( Trinco Aid Director), திரு. நந்தன விஜயலால் (Yana Foundation Director) ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தனர். அத்தோடு இன் நிகழ்வினை சிறந்த முறையில் Trinco Aid இன் நிறுவனர், நிகழ்ச்சி முகாமையாளர் ஆகியோரால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் மாணவர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

இது போன்ற திட்டங்களை எதிர்காலத்தில் செயற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்களும் நடைபெற்றது.

# மண் ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களால் வீதிகள் தேசம்

## போக்குவரத்துக்களுக்கு பாதிப்பு





( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் நானாட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட மடுக்கரை கிராமத்தில் ஸ்திரத்தன்மை அற்ற வீதிகளூடாக கனரக வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்வதால் வீதிகள் , சிறிய பாலங்கள் , சேதமடைந்து போக்குவரத்துக்கு உதவாத தன்மையாக மாறி வருவதாக பொது மக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வழியால் செல்லும் பாடசாலை மாணவர்கள் , பெண்கள் , சிறுவர்கள் , முதியவர்கள் , நோயாளிகள் , என்று பலரும் பாதிக்கப்பட்டு வருவதாக மடுக்கரை மற்றும் இராசமடு கிராமத்து மக்கள் குற்றம் சுமத்தியுள்ளார்கள் மேலும் பல வருடங்களாக அபிவிருத்தி எதுவும் காணாத குறித்த வீதி தற்போது புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதே இவ்வாறு ஒரு நாளைக்கு அளவு கணக்கில்லாதவாறு கனரக வாகனஙங்கள் அதிக பாரத்துடன் சென்றால் புதிய வீதி தாங்குமா? என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்

மேலும் மண் ஏற்றிச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது ஒரு பாதை ஆனால் இவர்கள் அந்த பாதை ஊடாக செலல்வதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் இவர்கள் மடுக்கரை இராசமடு பாதையை சேதப்படுத்துவதாகவே குற்றம் சுமத்தப்படுகின்றது.

மேலும் இந்த வீகளால் கனர வாகனங்கள் மண் ஏற்றி செல்வது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்தும் அதிகாரிகள் மண் மாபியாக்கள் பக்கம் சார்ந்து நின்று தவறுகளை நியாயப்படுத்துகிறார்களே தவிர பொதுமக்களுக்கு அதரவாக பேச மறுக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நானாட்டட்டான் பிரதேச செயலாளர் , மன்னார் மாவட்டச் செயலாளர் , மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் அவர்கள் இந்த விடயத்தில் கரிசனை கொண்டு பொதுமக்களுக்கு சார்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# திருக்கோவிலில் குறைந்த வருமானம் பெறும் 7500 குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசி!





( காரைதீவு சகா)

திருக்கோவிலில் குறைந்த வருமானம் பெறும் 7500 குடும்பங்களுக்கு 20கிலோ அரிசி பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேசத்தில் 22 கிராம சேவகர் பிரிவுகளில் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றவர்கள், காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்கள், சிறுநீரக நோயாளிகள் ,70 வயதுக்கு மேற்பட்டோருக்கான கொடுப்பனவு பெறுபவர்கள் ஆகியோர் உள்ளடங்களாக 7457 பேருக்கு தலா 20 கிலோ அரிசி பொதிகள் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக் கருவிற்கு அமைவாக 'நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் 'தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் மகளிர் சிறுவர் அலுவல்கள் சமூக வலுவூட்டல் அமைச்சு' ஆகியவற்றின் அனுசரணையுடன் 2022/2023 பெரும்போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பு அகற்றல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 'குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவசமாக அரிசி வழங்கல்' எனும் வேலைத் திட்டத்தின் கீழ் இது வழங்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் திருக்கோவில் -2 கிராம சேவகர் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உஷாந்த் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் கே.பரமானந்தம் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எம்.அரசரெத்தினம் தம்பிலுவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி கே.நிஷாந்தினி மற்றும் கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் ஏ..கந்தசாமி மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் ,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , திருக்கோவில் - 2 கிராம சேவகப் பிரிவு பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்

## அக்கரைப்பற்று, பனங்காடு அருள்நிறை மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் தேவஸ்தான

# வருடாந்த மகோற்சவ பெருவிழாவின் திருக்கொடியேற்றத் திருவிழா





(ம.கிரிசாந்)

அம்பாரை மாவட்டத்தில் உள்ள பழம்பெரும் ஆலயங்களில் ஒன்றான அக்கரைப்பற்று பனங்காடு அருள்நிறை மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ பெருவிழாவின் திருக்கொடியேற்றத் திருவிழா நிகழ்வானது விநாயகர் வழிபாடு, கிராமசந்தி வாஸ்துசாந்தி எனும் கிரிகைகளுடன் நேற்று (26/03/2023) ஆரம்பமாகியாது,

மேலும் நேற்று (27/03/2023) திங்கட்கிழமை திருக்கொடியேற்றம் நிகழ்வு பக்திபூர்வமாக சிறந்த முறையில் இடம்பெற்றது.

வருடாந்த மகோற்சவ பெருவிழாவின் திருக்கொடியேற்றத் திருவிழா நிகழ்வுகள் தினமும் பகல் நிகழ்வுகள் மற்றும் இரவு நிகழ்வுகள் என இடம்பெற உள்ளதுடன் (07/04/2023) திகதியன்று வைரவர் பூஜை கிரியையுடன் குறித்த பெருவிழா நிறைவு பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஈழ வளதிருநாட்டின் கிழக்கே மீன்பாடும் தேனாடாம் மட்டுநகருக்குத் தெற்கே அம்பாரை மாவட்டத்தில் அக்கரைப்பற்று நகரிலிருந்து இருமைல்களுக்கு அப்பால் சாகாமம் வீதியில் பனங்காடு என்னும் பெயரில் அழகிய கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தை சுற்றி வற்றாத ஜீவநதியாக தில்லைநதி வளைந்து பாய்கின்றது. செந்நெல் விளையும் செழிப்பு மிகு வயல் நிலங்கள் நிறைந்து விளங்குகின்றன. கடல்,ஆறு, குளம் ஆகிய மூன்று நீர் நிலைகளும் முறையுற அமைந்து மேலும் இக்கிராமத்தை அழகூட்டுகின்றன.

இத்தகைய இயற்கை எழில்கள் நிறைந்த இக்கிராமத்தில் கிழக்கே முதலும் முடிவும் இல்லா முழுமுதற் பெருமான் ஸ்ரீ பாசுபதேசுவரர் என்ற நாமத்தோடு அன்னை ஸ்ரீ மாதுமை அம்பாள் சகிதம் வீற்றிருந்து அருள் பாலித்தருளுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# சிறப்பாக இடம்பெற்ற அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலய முப்பெரும் விழா!









( காரைதீவு சகா)

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்யாலயத்தின் முப்பெரும் விழா வித்தியாலய அதிபர் பொன். பாரதிதாசன் தலைமையில்(26) ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இம் முப்பெரு விழாவிற்கு பிரதம அதிதியாக நாவிதன்வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் பி. பரமதயாளன் ,கௌரவ அதிதியாக உதவிக் கல்விப்பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, மற்றும் சிறப்பதிதிகளாக ஆரம்பக் கல்வி ஆசிரியஆலோசகர் எஸ். அற்புதராஜா, விழா அனுசரணையாளர் தெய்வநாயகம் சிவகுமார் ,பிரபல சமூக செயற்பாட்டாளர் சந்திரசேகரம் ராஜன், ஆலய தர்மகர்த்தாக்களான சுதா .சுரேந்திரன் , ரி.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள் .

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ரி. பிரவிஷன்(150) எஸ். மகிஷா (148)ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

மேலும் முன்பள்ளியிலிருந்து வருகைதந்த தரம் ஒன்று மாணவர்களை வரவேற்ற அதேவேளை தரம் ஐந்தில் நூறு வீதசித்தி பெற்ற 10 மாணவர்களினதும் விடுகைவிழாவும் ஒருங்கே இடம் பெற்றது. தரம் 5 புலமைப் பரிசில் ஆசிரியை திருமதி உதயலட்சுமி பொன்னாடை போர்த்தப்பட்டுப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். விடுகை பெற்றுச் செல்லும் மாணவர்கள் மற்றும் வருகைதந்த தரம் 1 மாணவர்களுக்கு விழா அனுசரணையாளர் கொடை வள்ளல் தெய்வநாயகம் சிவகுமார் பாடசாலை பைகள் உட்பட கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

சித்தி பெற்ற புலமையாளர்களான மகிஷா பிரவிசன் உள்ளிட்ட புலமையாளர்களின் கண்கவர் நடனம் பலரது பாராட்டையும் பெற்றது.

# விழிப்புணர்வு கருத்தரங்கு..!

(அ . அச்சுதன்)

திருகோணமலை சிறுவர் அபிவிருத்தி நிதியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொலிசாருக்கான சிறுவர் பாலியல் விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை உப்புவெளி ஜே.செவின் விலாஜ் ஹோட்டலில் நடைபெற்றது.

நிகழ்வில் வளவாளர்களாக சட்டத்தரணி தி.திருச்செந்தில்நாதன் , சட்ட மருத்துவ அதிகாரி டாக்டர்கிரில்ல , திட்டமுகாமையாளர் எஸ். சதீஸ், இணைப்பாளர் லக்ஷ்மி, பொலிஸ் அதிகாரி நளினி ஆகியோருடன் பலர் கலந்து கொண்டனர்

## சொல்லத் துடிக்குது மனசு: 07

# மாடு கொண்டு சூடு மிதித்தல் பொறுமையின் வெளிப்பாடு



சூடு மிதிக்கக் களவெட்டி காவல் பண்ணி
சூட்டோடு மாடுகட்டி சூடு மிதித்திடுவோம்

நமது முன்னோர் கிடைப்பதை வைத்து வாழப் பழகிக் கொண்டார்கள். தேவைகள், ஆசைகள் மிகக் குறைவாகவே இருந்தன. நமது வீடு, சுற்றம், சூழல், கிராமம் என வாழப் பழகிக் கொண்டார்கள். வீடுகளில் அன்பும் உறவும் கொட்டிக் கிடந்தது. சந்தோசமும் மகிழ்ச்சியும் நிலவியது. அன்பான உறவு, அன்பான குடும்பம் எனச் சந்தோசமாக வாழ்ந்தார்கள். அந்த வாழ்க்கை இன்று அருகிக் கொண்டு செல்கிறது. மனம் போன போக்கில் பலரும் வாழப் பழகிக் கொண்டனர். மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா? மனிதன் போன பாதையை மறந்து போகலாமா'' என்பது கவிஞர் கண்ணதாசனின் பாடலடி. இப்பாடல் போல்தான் நமது தனித்துவமான பண்பாடு, மரபுகள் சம்பிரதாயம், பழக்க வழக்கம் என்பவற்றில் பல எம்மைவிட்டு மறைந்து போய் விட்டன. அவை பற்றியே தொடர்ச்சியாக எழுதி வருகிறேன். முன்னைய கட்டுரையில் வீட்டு நிகழ்வுகள் ஊர் ஒற்றுமையின் வெளிப்பாடு என்ற தலைப்பில் கிடுகு கட்டுதல், வீடு வேய்தல், வேலி பிரித்துக் கட்டல் ஆகிய நிகழ்வுகள் எவ்வாறு ஊர் ஒற்றுமையோடு நடைபெற்றன என்பது பற்றி விளக்கி இருந்தேன். இக்கட்டுரையில் மாடுகளால் வயலை உழவுதல், விதைத்தல், அருவி வெட்டுதல் மாடுகளால் சூடு மிதித்தல் சூடு பற்றி விளக்க முனைகிறேன்.

முன்பு ஒரு சிலர் மாத்திரமே மண்ணெண்ணெயில் ஓடும் எச் மொடல் மெசி பேர்குசன் உழவு இயந்திரம் வைத்திருந்தார்கள். பிரதேசத்தில் உள்ள சகல நெல் வயல்களையும் உழவுவதற்குப் போதுமானதல்ல என்பதனால் சிலரே அதனை நம்பி இருந்தனர். எருது, எருமை மாடு வைத்திருப்பவர்கள் அவற்றைக் கொண்டே உழவினர். இன்னும் சிலர் கூலிக்கு மாடுகளைக் கொண்டு உழவினர். ஆவணி மாதத்தில் நாள், நச்சத்திரம் பார்த்து நாளுக்கு ஏர் பூட்டுவார்கள் அல்லது நாளுக்கு மண்வெட்டி கொண்டு கொத்துவார்கள். அதன்பின்னர் நிலை அடிப்பு (முதலாம் உழவு, புழுதி அடிப்பு), புல் நன்கு காய்ந்த பின்னர் மழை கண்டு பெரும்பாலும் புரட்டாதி மாதத்தில் இரண்டாம் உழவு செய்வார்கள். உழவுக்காக எருதுகள், எருமைக் கடாக்கள் பயன்படுத்தப்படும். களி நிலங்களை மிதித்துப் பண்படுத்துவதற்கும் எருமைக் கடாக்கள் பயன்படுத்தப்பட்டன. ஏர்க் கலப்பையில் மேளி, கலப்பை, ஏர்க்கால், நுகம், படுவாக் குத்தி, ஏர்க்காலையும் நுகத்தையும் இணைத்துக் கட்டப்படும் நந்தக கயிறு, இரும்புக் கொழு ஆகியன காணப்படும். இவை எல்லாம் மரத்தினால் அமைக்கப்பட்டிருக்கும். மரத்தினாலான படுவாக்குத்தி தேயாமல் இருப்பதற்காக அதன் அடிப்பாகத்தில் கொல்லன் கம்மாலையில் துருத்தியில் துவைந்தெடுக்கப்பட்ட கூம்பு வடிவ இரும்பினாலான பிளேற் பொருத்தப்பட்டிருக்கும். பிற்காலத்தில் படுவாக் குத்தியின் அடிப்பாகத்தில் பொருத்தப்பட்ட இரும்பினாலான பிரட்டுக் கலப்பையையும் பயன்படுத்தினார்கள். கலப்பையின் நுகத்தில் இரு மாடுகளைக் கட்டுவார்கள்.

புரட்டாதி இறுதி, ஐப்பசி முழுவதும், கார்த்திகை முற்பகுதி ஆகிய காலங்களிலேயே விதைப்பு நடைபெறும். விதைப்பதற்கு முன்பாக வக்கடைகள் நிரப்பி வரம்பு கட்டிப் புல் செருக்கப்பட்டு, பள்ளங்களை மூடிச் சமப்படுத்துவார்கள். அதன்பின்னர் நாள் பார்த்து நல்ல நாளில் விதைப்பார்கள். நெல்லை அளவோடு நுணுக்கமாக விதைக்கக்கூடியவர்கள் மாத்திரமே விதைப்பார்கள். முன்பெல்லாம் அடிக்கட்டுப் பசளை போட்டு விதைக்கப்படுவதில்லை. விதைப்பவருக்கு ஒருவர் நெல் எடுத்துக் கொடுப்பார். மற்றவர்கள் ஏர் கொண்டு உழவுவார்கள். இரு உழவு போடப்படும். இவ்விரு உழவுகளையும் நேர், குறுக்காக மாறி உழவுவார்கள். ஒரு உழவு முழுமையாக முடிந்த பின்னரே இரண்டாவது உழவு போடப்படும். நெல் நன்கு நிலத்தள் புதைந்தால் கெட்டியாக முளைவிட்டுப் பயிர் வளரும் என்பார்கள். விதைத்த பின்னர் களை கட்டுதல், களை நாசினி தெளித்தல், கிருமி நாசினி தெளித்தல், உரம் போடுதல், களை பிடுங்குதல், நீர் பாய்ச்சுதல், மேலதிக நீரைத் திறந்து விடல், வெள்ளத்தில் உடைபட்ட மடைகளைக் (வரம்புகளை) கட்டுதல் ஆகியன நடைபெறும். தினமும் அல்லது வாரத்தில் மூன்று, நான்கு நாட்கள் பயிரின் தன்மையைக் கண்காணிப்பர். ஏதாவது குறைபாடுகள் இருப்பின் உடனுக்குடன் உரிய நடவடிக்கையும் எடுக்கப்படும். நாள், நச்சத்திரம் பார்த்துப் புதிரெடுத்தல் நிகழ்வு இடம்பெறும். தமது வயலில் முற்றிய கதிர்களை ஒரு கைப்பிடி அளவில் பிய்த்தெடுத்துக் கொண்டு போய் வீட்டுப் படலைக் கருகில் (உழலை அல்லது வாசல் கேற்) கொழுவி வைப்பார்கள். உரிய முகூர்த்த நேரத்தில், உரிய மரபு, சம்பிரதாய முறைப்படி வீட்டுத் தலைவி புதிரெடுத்துக் கொண்டு சுவாமி அறையில் பாதுகாப்பாக வைப்பார். வேளாண்மை விழைந்ததும் நல்ல நாள் பார்த்துக் கதிரறுப்பர். அதன்பின் சிறிய காணி எனில் காணி உரிமையாளரும் சுற்றத்தார் சிலரும் சேர்ந்து அறுவடை செய்வர். பெரிய அளவிலான காணிகளை அறுவடை செய்ய முகாமைக்காரர் தலைமையிலான வெட்டுக் கூட்டத்துக்கு பொருந்திக் கொடுக்கப்படும். தொடர்ச்சி அம்முகாமைக்காரரே வருடா வருடம் அறுவடை செய்து வருவார். அவர்கள் வயல் உரிமையாளருக்கு (போடியாருக்கு) விசுவாசமாக இருப்பர். சில முகாமைக்காரர்கள் முற்பணமும் வாங்கி வெட்டுக் கூட்ட உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளித்திருப்பார். அறுவடை செய்வதற்குக் கொல்லன் கம்மாலையில் துருத்தியில் இட்டுப் பூக் கொத்திக் கைப்பிடி போட்ட தாக்கத்தி (கதிர் அறுக்கும் கத்தி) பயன்படுத்தப்படும்.



சோலையூர்க் குருபரன்

நாப்பது ஐம்பது வருடங்களுக்கு முன்னர் குறைந்த காலத்தில் விழையும் நெல்லினங்கள் விதைக்கப்படுவது மிகக் குறைவென்றே கூறலாம். பொக்களியான், சீனட்டி, முருங்கைப் பூச சம்பா, வாணன் (ஓர் ஆளின் சராசரி உயரத்துக்கு வளரும்), எச்-4, ஐஆர்-8 இன்னும் பல இருந்தாலும் நீண்ட நாள் பயிர்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தார்கள். உணவுக்காகச் சிவப்பரிசி நெல்லையே அதிகம் விதைத்தார்கள். பெரும்பாலானோர் நடப்பாண்டில் அறுவடை செய்த நெல்லை உணவுக்குப் பயன்படுத்த மாட்டார்கள். நெல் உறங்குநிலை அடைந்து, பழைய நெல் ஆகிய பின்னரே உணவுக்கு எடுப்பார்கள். பழைய அரிசி கடகம், உமல், கைப்பெட்டி, பெரிய சட்டி. பானை, கடாரம், நெல் கோட்டை, சாக்கு, பட்டறை ஆகியவற்றில் சேகரித்து வைப்பார்கள்.. கிராமங்களில் தமது சோற்றுக்கான அரிசியைத் தாமே நெல்லைச் சிலிர்க்க அவித்துக் (நெல் நன்றாக அவியும் போது நெல் வெடித்துச் சிலிர்திருக்கும்) வெயிலில் காயவைத்து கையினாலோ அல்லது மில்லிலோ குற்றி எடுப்பார்கள். சிலிர்த்த அரிசியில் சீனி இருக்காது. இப்படித்தான் அன்றைய மக்களின் வாழ்கை இருந்தன.

வேளாண்மை வெட்டி அறுவடை முடிந்ததும் ஓரிரு நாள் நெல் கதிர்களை (உப்பட்டி) நன்கு காயப் போடுவார்கள். காயவில்லை எனில் உப்பட்டிகள் புரட்டிப் போடப்படும். அதன்பின்னர் உருப்படிக் கயிற்றினால் கட்டுக்களாகக் கட்டுவார்கள். கட்டுக்கள் கட்டப்பட்டு அரைவாசி முடியும் தருவாயில் சிலர் கட்டுக்களைக் கட்டிக் கொண்டிருக்க ஏனையோர் சூடு வைப்பதற்கும், கட்டுக்களைச் சுமந்து சூடு வைக்கும் களவெட்டிக்குக் கொண்டு செல்வதற்கும் செல்வர். தேர்ச்சி பெற்ற ஒருவர் சூடு வைப்பதற்கும், இன்னொருவர் சூடு போது வட்ட வடிவில் அமையுமாறு (சூடு பார்ப்பவர்) சரிபார்த்துக் கொண்டிருப்பர். இவை யாவும் முகாமைக்காரரின் கண்காணிப்பில் நடைபெறும். வைகாசி, ஆனி, ஆவணி மாதத்தில் சூடுகள் மிதிக்கப்படும் வரை மழை நீர் உட்செல்லாமல் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக கூம்பு வடிவில சூடு வைத்து அதன் மேல் வைக்கோலால் வேய்வார்கள். இவ்வாறு ஒவ்வொரு நெல் இனத்துக்கும் தனித்தனியே சூடு வைக்கப்படும். சூடுகளைச் சுற்றிப் பாதுகாப்புக்காக கம்பி வேலி அமைத்திருப்பர். இரவில் சூடுகளை யானை, மாடு, களவர் ஆகியோரிடம் இருந்து சூடுகளைப் பாதுகாக்க ஹரிக்கன் இலாம்புடன் சென்று சூட்டுக்கு அருகில் போடப்பட்டிருக்கும் சிராம்பி அல்லது வாடியில் இருந்து பாதுகாப்பர். நிரந்தர வாடி இருந்தால் பாதுகாப்பு நோக்கங்களுக்காக வாடிக்கு அருகிலேயே சூடுகள் வைக்கப்படும்.



கோடை காலத்தில் (வைகாசி, ஆனி, ஆவணி மாதத்தில்) மாட்டால் சூடு மிதிப்பதற்கான தினம் தீர்மானிக்கப்பட்டு சூடு மிதிப்பு நடைபெறும்.

களவெட்டி காவல் செய்து கருத்துடனே
மாடுகட்டிச் சூடும் மிதித்திடுவோம்

சூடடிப்புத் தொடரும்



(அஷ்ரப் ஏ.சமத்)

சீன நாட்டில் வாழும் பௌத்த சங்கத்தினர் இலங்கையில் வாழும் சகல இன மக்களுக்குமாக 55 ஆயிரம் உலர் உணவுப் பொதிகளை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளனர். ஒவ்வொறு பொதியும் 7 ஆயிரம் ருபா பெருமதியான உணவுப் பொருட்கள் அடங்கியுள்ளன.

இப் பொதிகளை . கொள்ளுப்பிட்டி பிரதேச பள்ளிவாசல்கள் சம்மேளனத்தினால் இலங்கைக்கான சீனத்தூதுவர் மற்றும் வெளிநாட்டு அமைச்சர் அலி சப்றி (ஜனாதிபதி சட்டத்தரணி) கொள்ளுப்பிட்டி பிரதேச பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் றிசான் ஹுசைன், கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல்கள் தலைவர் கலீல் ஹாஜி ஆகியோர்களினால் இப் பொதிகளில் வசதியற்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

## புதுவருடத்தையோட்டி 4 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி பகிர்ந்தளிப்பு

( வி.ரி. சகாதேவராஜா)



அரசின் புதிய எழுச்சி திட்டத்திற்கமைய புதுவருடத்தையொட்டி களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் வருமானம் குறைந்த சுமார் 14ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 10கிலோ அரிசி இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் 2022/2023பெரும்போக நெல் கொள்வனவு மற்றும் அரிசி விநியோக தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசி விநியோகம் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

2022/2023 பெரும்போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் நெல் கையிருப்பினை அரிசியாக்கல் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி அடையாளம் காணப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிகழ்வு களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஜனாதிபதி பங்கேற்புடனான தேசிய நிகழ்விற்கு சமாந்தரமானதாக உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 13429 குடும்பங்கள் இத் திட்டத்தில் பயனடைய உள்ளனர்.

## பிரபா கணேசனின் கட்சியான ஜனநாயக கூட்டணி முன்னியில் பல்வேறு சிவில் அமைப்புக்கள் கைச்சாத்திட்டனர்



(அஷ்ரப் ஏ சமத்)

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசியல் கட்சியுடன் இலங்கையில் உள்ள பல்வேறு சிவில் அமைப்புக்கள், ஒன்றினைந்து கூட்டணியாக செயற்படுவதற்காக அக் கட்சிகளின் தலைவர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு கொழும்பு நூலக கேட்போர் கூடத்தில் கட்சியின் தலைவர் முன்னாள் பிரதியமைச்சருமான பிரபா கனேஸ் தலைமையில் 25ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வின்போது அகில இலங்கை தேசிய சமத்துவம், சிற்றுன்டிச்சாலைகள் சங்கம், நுகர்வோ'கள் சங்கம், இலங்கை சமத்துவக் கூட்டணி, கொழும்பு முஸ்லிம் வர்த்தகர் சங்கம், மலையக அடிப்படை உரிமைகள் சங்கம், சிறுகைத் தொழிலாளர்கள் சங்கம்,போன்ற பல்வேறு சிவில் அமைப்புக்கள் சிறிய கட்சிகள் ஒன்றினைந்து ஜனநாயக கூட்டணி முன்னணிஒன்றை அமைத்துள்ளது.

இங்கு கருத்து தெரிவித்த நுகர்வோர்கள் உரிமை ற்றும் சிற்றுன்டிச் சாலைகள் சங்த்தின் தலைவர் அசேல சம்பத் , எமது அமைப்பு தினந்தோறும் மக்கள் நலனில் மக்கள் உட்கொள்ளும் உணவு மற்றும் பாவனைப் பொருட்களை விலையேற்றம் மக்களது தலைகளில் விதிக்கும் வரிச் சுமைகளுக்கும் எதிராக நாங்கள் குரல் கொடுத்து வந்துள்ளோம். அத்துடன் பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்யும்போது கொள்ளை இலாபம், அரச வற் வரி மற்றும் பல செயற்பாடுகளில் நாளுக்கு நாள் நடைபெறும் முறைகேடுகள், லஞ்சம் போன்ற பலவற்றை அவ்வப்போது வீதிக்கிறங்கி அதனை வெளியில் வெளிக்கெணர்ந்துள்ளோம். தற்பொழுது மூவினங்களையும பிரதிபலிக்கும் பல சங்கங்கள், சிவில் அமைப்புக்கள் பிரபா கனேசனின் அரசியல் கட்சியுடன் ஒன்றினைந்துள்ளோம். இக் கட்சி பதிவு செய்யப்பட்ட ஓர் அரசியல் கட்சியுடன் இணைந்து எமது மக்களின் பிரச்சினைகள் உரிமைகள் விடயத்தில் எதிர்காலத்தில் ஓர் கூட்டணியாகச் செயற்பட உள்ளதாகவும் அசேல சம்பந் அங்கு தெரிவித்தார்.







மூதூர் - கிளிவெட்டி அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த பிரமோற்சவத்தின் பெரு விழா ஞாயிறு காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படங்கள் - அ . அச்சுதன்)

# வேலோடுமலை செல்ல 10 லட்சம் ரூபா பெறுமதியான படகுப் பாதை வழங்கி வைப்பு!

## ஏறாவூர் பிரதேச சபையின் ஆன்மீகப் பணி







**( வி.ரி. சகாதேவராஜா)**

ஈழத்து பழநி என அழைக்கப்படும் கிழக்கில் வரலாற்று பிரசித்தி பெற்ற சித்தாண்டி வேலோடுமலை முருகன் ஆலயத்திற்குச் செல்ல 10லட்சருபா பெறுமதியான படகுப் பாதை வழங்கி வைக்கப்பட்டது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சர்வாவின் வழிகாட்டலில் முன்நாள் உறுப்பினர்களான கே. துரைரெத்தினம், எஸ்.திருநாவுக்கரசு ஆகியோரின் வேண்டுகோளுக்கமைய மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். பிரகாஷ் இதனை ஆலயத்திற்கு வழங்கி வைத்தார்.

வேலோடுமலை முருகன் ஆலயத்திற்குச் செல்வதானால் சித்தாண்டி சந்தனமடு ஆற்றினை கடக்க வேண்டும். இதுவரை காலமும் பாதுகாப்பற்ற முறையில் வள்ளல்களில் மக்கள் பயத்துடன் பயணித்து வந்தனர்.

அக் குறையை ஏறாவூர் பிரதேச சபை தீர்த்து வைத்துள்ளது.

அப் படகுப் பாதை கையளிக்கும் வைபவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்தனமடு ஆற்றில் இடம்பெற்றது.

வைபவத்தில் சித்தாண்டி வேலோடுமலை முருகன் ஆலய தலைவர் .சு.தியாகராசாவிடம் இப் படகுப் பாதை ஒப்படைக்கப்பட்டது.

ஏறாவூர் பிரதேச சபையின் ஆன்மீகப் பணியை பலரும் பாராட்டினர்.

எதிர்வரும் 30ஆம் திகதி ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது.

# இன, மத நல்லிணக்கம் சார் பேச்சு, சித்திர போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா





**(ரக்ஸனா)**

இனம் மற்றும் மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் முகமாக றாணமடு உதய சூரியா சகவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் அக்ரெட் நிறுவனத்தின் அனுசரணையில் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட பேச்சு, சித்திர போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா சங்க தலைவி மு.நந்தினி தலைமையில் ஞாயிறுக்கிழமை (26) வெல்லாவெளி றாணமடு பல்தேவைக் கட்டட வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையே ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தும் முகமான மாணவர்களுக்கிடையேயான சித்திர, பேச்சு போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் அதிதிகளால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் மாணவர்களின் பேச்சு மற்றும் நடனங்கள் நிகழ்வினை அலங்கரித்தது.

இதன்போது போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலாளர் இரா.இராகுலநாயகி மற்றும் உதவி பிரதேச செயலாளர் தூலாஞ்சன், திட்டமிடல் பணிப்பாளர் சசிகுமார், அக்ரெட் நிறுவனத்தின் பிரதி திட்ட முகாமையாளர் ஆர்.கஜேந்திரன், கிராம சேவை உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# இலங்கையில் இளம் பொருளியல் பேராசிரியராக கலாநிதி கணேஸ் சுரேஸ் பதவியுயர்வு!!



**(ரக்ஸனா)**

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பொருளியல் கற்கை அலகின் சிரேஸ்ர விரிவுரையாளர் கலாநிதி கணேஸ் சுரேஸ் அவர்களுக்கு பொருளியல் பேராசிரியர் பதவி உயர்விற்கான அங்கிகாரம் பல்கலைக்கழக பேரவையினால் வழங்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் தலைமையில் (25.03.2023) இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை மற்றும் மதிப்பீட்டிற்கு அமைய இதற்கான அங்கிகாரம் வழங்கப்பட்டது.

கலாநிதி கணேஸ் சுரேஸ் இலங்கையில் உள்ள பொருளியல் பாட பேராசிரியர்களுக்குள் இளவயதுப் பேராசிரியர் என்பதுடன் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாச்சார பீடத்தின் இளவயதுப் பேராசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் தனது கலாநிதி கற்கை நெறியை அவுஸ்ரேலியாவிலுள்ள குயின்ஸ்லாந்து தொழிநுட்ப பல்கலைக்கழகத்திலும், முதுமாணிக் கற்கைநெறியினை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் தனது இளமாணிப் பொருளியல் சிறப்புக் கற்கை நெறியினை கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்திருந்தார். இவர் தனது கலாநிதி கற்கை நெறிக்கான ஆய்வினை சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவர் தனது ஆராய்ச்சிகளை உலகத்தரம் வாய்ந்த ஆய்வுச்சஞ்சிகைகளில் வெளியிட்டிருந்தமை இவரது புலமைமையை வெளிக்காட்டுகின்றது. மேலும் இவர் கனடா, அவுஸ்ரேலியா, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், பங்களாதேஸ், இந்தியா போன்ற நாடுகளில் ஆய்வுக் கருத்தரங்குகளிலும் பங்கேற்றுள்ளார்.

கணேஸ் மற்றும் தவமணிதேவி ஆகியோரின் மூத்த புதல்வரான கலாநிதி. கணேஸ் சுரேஸ் பெரியநீலாவணையை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை பெரியநீலாவணை சரஸ்வதி வித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர்தரக்கல்வியினை கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையிலும் தொடர்ந்திருந்தார். கலாநிதி கணேஸ் சுரேஸ் சிறந்த சமூகப்பற்றாளரும் பிரதேச அபிவிருத்தியில் அதிகளவு ஆர்வமுடையவருமாவார்.

# நோன்பாளிகளுக்கு சுகாதாரமான உணவுகளை வழங்காத உணவங்கள் மீது நடவடிக்கை எடுக்க தீர்மானம்

## சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அர்சத் காரியப்பர்





**(நூருல் ஹுதா உமர்)**

புனித நோன்புகாலத்தில் அதிகமான மக்கள் தமது இப்தாருக்கு தேவையான உணவுகளையும், சிலர் தமது ஸஹர் நேரத்திற்கு தேவையான உணவுகளையும் கடைகளிலையே வாங்குகிறார்கள். இதனை முன் கொண்டு உண்பதற்கு தரமற்ற உணவுகளை பொதுமக்களின் பாவனைக்கு வழங்குபவர்கள் மீதும், பாவனைக்கு பொருத்தமற்ற, நீண்டநாட்கள் குளிர்சாதன பெட்டியில் வைத்த, பழைய எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவுகளை மக்களுக்கு விற்பனை செய்பவர்கள் மீது திடீர் சோதனைகளை மேற்கொண்டு பாவனைக்கு உகந்ததல்லாத பொருட்களை அழிக்கவுள்ளதுடன், அந்த உணவங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க தயாராக இருப்பதாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு இன்று கருத்து வெளியிட்ட அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரத்துறையினரிடம் பொதுமக்கள் முன்வைக்கும் முறைப்பாடுகளை அடுத்து துப்பரவில்லாத, முறையான சுகாதார வழிமுறைகளை பின்பற்றாத, பாவனைக்கு உகந்ததல்லாத உணவுகளை விற்போர் மீதும் அந்த உணவகங்கள் மீதும் தயவு தாட்சணையின்றி நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளோம்.

சுகாதாரத்தையும் தாண்டி இறைவனுக்கு பயந்து நோன்பாளிகள் சாப்பிடும் உணவுகளை தரமானதாக வழங்கவேண்டியது ஒவ்வொரு உணவகங்களினதும் கடமையாகும். நீண்டநேரம் நோன்பு நோற்று நோன்பை துறக்கும் நேரத்தில் தரமில்லாத உணவுகளை உட்கொள்வதன் மூலம் பல்வேறு தர்மசங்கடங்களை அந்த நோன்பாளிகள் சந்திக்க நேரிடும். அதிகமதிகம் நன்மைகளை சேகரிக்க வேண்டிய இந்த மாதத்தில் நியாயமான விலைகளில் சுத்தமாகவும், சுகாதாரமுறையிலும் தயாரித்த உணவுகளை மக்களுக்கு வழங்க உணவகங்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வவுனியாவிற்கு திடீர் விஜயம்



பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் வன்னிப் படைத் தலைமையகத்திற்கு திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள வன்னிப் படைத் தலைமையகத்திற்கு (25) திடீர் விஜயம் மேற்கொண்ட அவர் வன்னிப் படைக் கட்டளைத் தளபதி உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டுள்ளதுடன், படைத் தலைமையகத்தையும் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாக கு.திலீபன் அவர்களின் அலுவலகத்திற்கு சென்று அவருடனும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.